மாநில நிதி ஆணையம்–மூன்றாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகள்–அத்தியாயம்–V – பத்தி எண்.64 (iv) – முத்திரைத் தீர்வை மீதான மேல்வரிக்கான வசூல் கட்டணம் – நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான வசூல் கட்டண வீதத்தை ஒரே சீராக 3 விழுக்காடாகத் திருத்தி அமைத்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நிதித் (நிதிக் குழு – IV)துறை**

அரசாணை நிலை எண். 396 நாள் 16.09.08
ஆவணி 31,
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டது:-

1. அரசாணை நிலை எண்.284/நிதித்(நிதிக் குழு.IV) துறை / நாள் 12.8.2002
2. பதிவுத்துறைத் தலைவரின் கடித எண்.32818/c2/2005/ நாள் 17.7.2008

,,,,,,,

**ஆணை:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் இரண்டாவது மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளை ஏற்று நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மீதான மேல்வரிக்கான வசூல் கட்டணம் முறையே 5 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடாக 1.4.2002 முதல் அரசால் இருத்திக் கொள்ள ஆணையிடப்பட்டது.

2. மூன்றாவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையின் அத்தியாயம் -V - பத்தி 64 (iv) இல் நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புப்பகுதிகளில் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மீதான மேல்வரிக்கான வசூல் கட்டணம் மேல்வரி வசூலில் 1 விழுக்காடு என்ற ஒரே சீரான வீதத்தில் அரசால் இருத்திக் கொள்ளப்படலாம் என பரிந்துரைத்துள்ளது. நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் வசூலிக்கப்படும் மேல் வரி வசூலில் ஒரே சீராக 3 விழுக்காடு என்ற அடிப்படையில் வசூல் கட்டணம் அரசால் இருத்திக் கொள்ளப்படலாம் என்ற மாறுதலுடன் இப்பரிந்துரை அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இதனை உள்ளடக்கிய மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கைகளின் விளக்கக் குறிப்பு, கடந்த 10.5.2007 அன்று சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது.

3. அதனைத் தொடர்ந்து, பார்வை இரண்டில் படிக்கப்பட்ட பதிவுத்துறைத் தலைவரின் கடிதத்தில் அனுப்பப்பட்ட கருத்துருவை ஆய்வு செய்து அரசு கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:

i) நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் வசூலிக்கப்படும் முத்திரைத் தீர்வை மீதான மேல்வரிக்கான வசூல் கட்டணம், மேல்வரி வசூலில் ஒரே சீராக 3 விழுக்காடாக அரசால் இருத்திக் கொள்ளப்படும்.

ii) இந்த ஆணை 1.4.2007 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

iii) நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில், 5 விழுக்காடு என்ற அடிப்படையில் 1.4.2007 முதல் மிகையாக அரசால் இருத்திக் கொள்ளப்பட்ட வசூல் கட்டணம் 2008 – 09 முதல் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும் முத்திரைத் தீர்வை மீதான மேல்வரியுடன் சேர்த்து சரிக்கட்டப்படும்.

iv) மாவட்ட அளவிலான பதிவுத்துறை அலுவலர்கள் இவ்வாணையை உடனடியாக செயல்படுத்தக் கோரி அறிவுறுத்துமாறு வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

*கு. ஞானதேசிகன்*
*முதன்மைச் செயலாளர்*

பெறுநர்

அரசு செயலாளர், வணிகவரிகள் மற்றும் பதிவுத் துறை, சென்னை – 9.
அரசு செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சென்னை – 9.
பதிவுத்துறைத் தலைவர், சென்னை – 28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, சென்னை – 15.
பேரூராட்சிகள் ஆணையர், சென்னை – 108.
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 5.
இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சென்னை – 108.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை – 3.
மாநில முதன்மை கணக்காயர் (பொதுத் தணிக்கை) சென்னை – 18.
மாநில கணக்காயர் (கணக்கு & பணிவரவுகள்) சென்னை – 18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
ஆணையர், கோயம்புத்தூர்/மதுரை/திருச்சி/ சேலம்/ திருநெல்வேலி/ ஈரோடு/ திருப்பூர்/ வேலூர்/தூத்துக்குடி மாநகராட்சிகள்.
அனைத்து மாவட்ட ஊராட்சி உதவி இயக்குநர்கள்,
அனைத்து மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி இயக்குநர்கள்.

நகல்:

அரசு முதன்மைச் செயலாளர், நிதித்துறை அவர்களின் தனிச் செயலர், சென்னை – 9.
பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை ஆணையர், சென்னை – 6.
இயக்குநர், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை, சென்னை – 108.
அனைத்து தலைமைச் செயலகத்துறைகள், சென்னை – 9.
அனைத்து அலுவலர்கள், நிதித்துறை, சென்னை – 9.
நிதித் (ஊ.வ/ந.நிம.கு.வ/ நிதி ஆதாரங்கள் I & II / வழிவகை/ வருவாய்/ நி.கு.I)துறை, சென்னை– 9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்